பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**24 02 2026** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு 4 நாள் பயணமாக, மகாராஷ்டிரா, ஜார்கண்ட், ராஜஸ்தான் மாநிலங்களுக்கு இன்று செல்கிறார்.

2. மத்திய அமைச்சகங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் சொத்து பணமாக்குதல் இரண்டாம் கட்ட திட்டத்தை நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

3. ஜார்கண்ட் மாநிலத்தில் விமான ஆம்புலன்ஸ் விபத்துக்குள்ளானதில் 7 பயணிகள் உயிரிழந்தனர்.

4. பங்களாதேஷ் நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 12ஆம் தேதி தொடங்கும் என்று அந்நாட்டு அதிபர் திரு. முகமது ஷஹாபுதீன் அறிவித்துள்ளார்.

5. ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் மோகன் பஹான் அணி 2-0 என்ற கோல் கணக்கில் சென்னை அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மகாராஷ்டிரா, ஜார்கண்ட் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களுக்கு 4 நாள் பயணமாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று செல்கிறார்.

மும்பையில் உள்ள மக்கள் மாளிகையில் இன்று, ‘‘உயிர் காக்கும் ஆரோக்கிய பாரதம்’’ என்ற நாடு தழுவிய பிரச்சார இயக்கத்தை குடியரசுத்தலைவர் இன்று தொடங்கி வைக்கிறார்.

மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் சார்பில் புல்தானாவில் நாளை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேசிய ஆரோக்கிய கண்காட்சியில் குடியரசுத்தலைவர் பங்கேற்கிறார்.

தொடர்ந்து நாக்பூரில் நடைபெறும் நிகழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளிலும் அவர் கலந்துகொள்கிறார்.

நாளை மறுநாள் ஜம்ஷெட்பூரில் ஜெகந்நாதர் கோயிலுக்கான பூமி பூஜையிலும் குடியரசுத்தலைவர் பங்கேற்கிறார்.

அங்குள்ள மணிப்பால் மருத்துவக் கல்லூரிக்கும் செல்லும் திருமதி திரௌபதி முர்மு, மாணவர்களுடன் கலந்துரையாடுகிறார்.

<<<<>>>>

மத்திய அமைச்சகங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் சொத்து பணமாக்குதல் இரண்டாம் கட்ட திட்டத்தை நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் புதுதில்லியில் நேற்று தொடங்கி வைத்தார்.

2025-30ஆம் ஆண்டுக்கான சொத்து பணமாக்குதல் திட்டம் மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் உள்கட்டமைப்பு வரி தொடர்பான அமைச்சகங்களுடன் நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் ஆலோசனை மேற்கொண்டதன் அடிப்படையில் அடுத்த 5 ஆண்டு காலத்தில் மத்திய அமைச்சகங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் சொத்து பணமாக்குதல் நடைமுறையை நித்தி ஆயோக் உருவாக்கியுள்ளது.

அதன்படி தனியார்துறை முதலீடான 5 லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் உட்பட 16 லட்சத்து 72 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு மொத்த பணமாக்குதல் திட்டம் மதிப்பிடப்பட்டுள்ளதாக நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களின் தேர்தல் ஆணையர்கள் பங்கேற்கும் தேசிய அளவிலான வட்டமேஜை மாநாடு புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

27 ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெற உள்ள இந்த மாநாட்டிற்கு

தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் தலைமை தாங்குகிறார்.

ஏற்கனவே இதுபோன்ற மாநாடு கடந்த 1999ஆம் ஆண்டில் நடைபெற்றதாக தேர்தல் ஆணைய செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் தேர்தல் ஆணையர்கள் டாக்டர் சுப்பீர் சிங் சாந்து, டாக்டர் விவேக் ஜோஷி ஆகியோரும் கலந்துகொள்கிறார்கள்.

மாநில தேர்தல் ஆணையர்களுடன் அவர்களின் சட்ட மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்கிறார்கள்.

தேர்தல் ஆணையம் மற்றும் மாநில தேர்தல் ஆணையங்களின் செயல்பாடுகளை ஊக்குவிப்பதுடன் தேர்தல் நடைமுறைகள் குறித்தும் இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஜார்கண்ட் மாநிலத்தில் விமான ஆம்புலன்ஸ் விபத்துக்குள்ளானதில் 7 பயணிகள் உயிரிழந்தனர்.

ராஞ்சியில் இருந்து தில்லிக்கு சென்றுகொண்டிருந்த அந்த விமானம் சிமாரியா என்ற இடத்தில் விபத்தில் சிக்கியதாகவும், அதில் பயணம் செய்த அனைவரும் உயிரிழந்ததாகவும் விமான நிலைய உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புறப்பட்ட சில நிமிடங்களிலேயே விபத்து ஏற்பட்டதாகவும், விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெறுவதாகவும் அவர மேலும் கூறினார்.

<<<<>>>>

புதுதில்லியில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடு இந்தியாவை உலக அளவில் அடுத்தகட்டத்திற்கு கொண்டு சென்றிருப்பதாக அதில் பங்கேற்ற சேலத்தைச் சேர்ந்த கல்லூரி பேராசிரியர் தெரிவித்தார்.

**(Voice Byte - Lecturer - Sec 34)**

இந்த உச்சிமாநாடு மிகவும் பயனுள்ள வகையில் அமைந்ததாக கல்லூரி மாணவர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

**(Voice Byte - Students - 48 Sec)**

<<<<>>>>

நாட்டின் பசுமை எரிசக்தி பயணத்தில், ‘‘பிரதமரின் சூரிய சக்தி திட்டம்’’ பாராட்டத்தக்க ஒரு மைல்கல் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சூரிய சக்தி திட்டத்தின்கீழ் 30 லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகளுக்கு ஒளி கிடைத்திருப்பதாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷியின் சமூக வலைதளப் பதிவை பகிர்ந்துள்ள பிரதமர், இந்த திட்டத்தால் பயனடைந்துள்ள அனைவருக்கும் பாராட்டுகளை தெரிவித்துக்கொண்டுள்ளார்.

மேற்கூரை சூரியசக்தியை மக்கள் ஏற்றுக்கொண்டிருப்பதன் மூலம் சேமிப்பு, நிலைத்தன்மை மற்றும் தன்னிறைவு அதிகரிக்க வழிவகை ஏற்படும் என்று அவர் கூறியுள்ளார்.

பாதுகாப்பான மற்றும் பசுமையான எரிசக்தி திட்டத்தால் எதிர்கால இந்தியாவை உருவாக்குவதற்கான அரசின் முயற்சிகளுக்கு மேலும் இது வலுசேர்க்கும் என்றும் திரு. நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

புவனேஸ்வரில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மற்றும் ரோபோட்டிக் அறுவை சிகிச்சை பிரிவை மத்திய அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், தரமான சுகாதார சிகிச்சை வழங்குவதை மேம்படுத்தவும், சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்தவும் இதுபோன்ற வசதிகள் வழிவகுக்கும் என்று கூறினார்.

ஒடிசா மற்றும் நாட்டின் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு உயிர் காக்கும் சிகிச்சைகளை வழங்கவும், உலக தரத்திலான நவீன சுகாதார வசதிகளை வழங்கவும் இதுபோன்ற அறுவை சிகிச்சை பிரிவுகள் கூடுதல் அம்சமாக விளங்கும் என்று அவர் கூறினார்.

உறுப்பு தான நடைமுறைகளை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு இதுபோன்ற வசதிகள் முக்கியமான நடவடிக்கையாக அமையும் என்றும் திரு. ஜெ.பி. நட்டா நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

புதுதில்லி இந்திய செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் இளைஞர் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்கள் நடத்திய

ஆர்ப்பாட்டத்திற்கு நாடு முழுவதும் உள்ள கல்வியாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பிரபல கல்வி நிறுவனங்களின் 160க்கும் மேற்பட்ட கல்வியாளர்கள் கூட்டாக கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் காங்கிரஸ் கட்சியினரின் செயல் மிகவும் வருந்தத்தக்கது என்றும், தவறான முன்னுதாரமாக அமைந்தது என்றும் தெரிவித்துள்ளனர்.

செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடு என்பது ஒரு கட்சி சார்ந்த தளமோ அல்லது உள்நாட்டு அரசியல் பிரச்சாரத்திற்கான இடமோ கிடையாது என்றும் கல்வியாளர்கள் அதில் குறிப்பிட்டுள்ளனர்.

காங்கிரஸ் கட்சியின் இந்த அணுகுமுறை பரவலான தேசிய நலனுக்கு எதிரானது என்றும் அவர்கள் அதில் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

பங்களாதேஷில் தேர்தலுக்கு பின்னர் 13வது நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 12ஆம் தேதி தொடங்கும் என்று அந்நாட்டு அதிபர் திரு. முகமது ஷஹாபுதீன் அறிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் பங்களாதேஷ் தேசிய கட்சியான BNP வெற்றி பெற்று புதிய அரசை அமைத்தது.

ஜமாத்-இ-இஸ்லாமி கட்சி எதிர்க்கட்சி அந்தஸ்தை பெற்றுள்ளது.

இந்நிலையில் புதிய நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்தொடரை அதிபர் திரு. முகமது ஷஹாபுதீன் அடுத்த மாதம் 12ஆம் தேதி காலை 11 மணிக்கு கூட்டியிருப்பதாக நாடாளுமன்ற செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

<<<<>>>>

ஒடிசாவின் ஒருசில பகுதிகள், மேற்குவங்கம் மற்றும் ஜார்கண்ட் மாநில கங்கைக் கரையோர மாவட்டங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் மத்திய மற்றும் வடமேற்கு மாநிலங்களில் அடுத்த 3 தினங்களில் வெப்பநிலை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்றும் வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மோகன் பஹான் அணி 2-0 என்ற கோல் கணக்கில் சென்னை அணியை வென்றது.

புவனேஸ்வரில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஒடிசா அணி - இண்டர் காசி அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**